எது எதை முதலில் எடுத்துக்கொள்ளலாம் என்ற பரிசீலனை நடைபெற்று வருகிறது. நிதிநிலைக்கேற்றவாறு பரிசீலனை செய்து ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படும்.

புதுக்கோட்டை மாவட்டம்

* 223—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்
திரு. என். கிட்டப்பா மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உத்தேச புதுக்கோட்டை மாவட்ட அமைப்பில் கரூர் வட்டம், அரவக்குறிச்சி பகுதிகள் ஏதும் இணைக்கப்படுவதற்கான உத்தேசம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. வா. மை அப்துல் ஜப்பார்: இந்த உத்தேச புதுக்கோட்டை மாவட்டம் இப்போது இருப்பதைப் போல் தர்மபுரி, ராமனாதபுரம் மாவட்டங்களைப் போன்று பிற்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு மத்திய அரசிடமிருந்து ஏதாவது விசேஷ சலுகைகள் பெற அரசுக்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்போதே சில பகுதிகள் பிற்பட்ட பகுதிகளாக கருதப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டம் அமைக்கப்பட்ட பிறகு அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. என் கிட்டப்பா: புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய துவக்கம் வருகிற தமிழர் திருநாளாகிய பொங்கல் நாள் அன்று துவங்கப்பட இருப்பதாக அரசு அறிவித்துள்ளதாக அறிகிறேன். துவங்கப்பட இருக்கிற புதுக்கோட்டை மாவட்டத்தில் பக்கத்தில் உள்ள எந்தெந்த மாவட்டங்களில் இருந்து எந்தெந்தப் பகுதிகள், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இருந்து எந்தெந்தப் பகுதிகள் இணைக்கப்பட இருக்கின்றன என்பதையும் அறந்தாங்கிப் பகுதி அதில் சேர்த்துக்கொள்ளப்பட இருக்கிறதா என்பதையும் அறிவிக்க இயலுமா?

1973 நவம்பர் 20]

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The new district will be constituted with effect from 14th January 1974. A Special Officer has been appointed to work out details and also make preliminary arrangements in connection with the formation of the Pudukottai District.

The proposed Pudukottai District will comprise of the following areas :—

1. Thirumayam;

2. Kulathur;

3. Alangudi;

4. The present Pudukottai sub-taluk will be upgraded into a main taluk and Gandharvakottai and Kallakottai firkas taken away from Orathanadu will be added to the Pudukottai District;

5. Aranthangi taluk;

6. Twenty-one Revenue Villages in Keeramangalam firka of Pattukottai taluk in Thanjavur district will be attached to the Alangudi taluk;

7. Five Revenue Villages taken from Thanjavur taluk will be added to Thirumayam taluk.

Subsequently, the Government consider that the villages covered by the C.M.P. area in Aranthangi taluk should remain in Thanjavur district itself so that the agriculturists will continue to enjoy the benefits and concessions extended by the Government. However, a final decision has not been taken.

வக்பு போர்டால் தொழிற்பயிற்சிப் பள்ளி துவக்கம்

*224 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வக்பு போர்டால் திருச்சியில் ஒரு தொழிற் கல்விக் கூடம் துவக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: துவக்கப்படயிருக்கிற தொழிற் கல்விக் கூடம் எந்த இடத்தில் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது?